



வாள் 1 | திருவள்ளுவர் ஆண்டு 1979 ஆனி 6
19-6-48 சனிக்கிழமை | வீச்சு 43

ஆசிரியர்கள்:






புரட்சியின் சின்னம்




தொடர்கதை :

பன்னிரெண்டாவது பகுதி

## விஷக் கிண்ணம்

குமுதம் ஒருநாள் தன் அறையில் தனியாக உட்கார்ந்துகொண்டு, மறைந்து வாழும் தன் காதலன் எப்பொழுது வருவானோ என்ற எண்ணச் சுழலில் சிக்கி ஏக்கத்தில் ஆழ்ந்திருந்தாள். "அத்தானிடம் அன்புகொண்ட அப்பாவின் மனம் ஏன் இப்படி மாறிவிட்டது?" என்றெண்ணி, காரணம் அறியமுடியாமல் கண்ணீர் உகுத்தாள். மன மாற்றம் ஏற்பட்டது ஏன், எதற்கு, என்றெல்லாம் யோசித்து யோசித்துப் பார்த்தாள்! அவளுக்கு ஒன்றும் புரியவில்லை.

இன்று மலர்ந்து, இளம் பெண்ணின் கருங் கூந்தலில் அமர்ந்து மணமும் அழகும் தந்த மலர், நாளை சருகாகிறது; விரும்பி சூடப்பட்ட அதே மலர் பிறகு வீசி எறியப்படுகிறது! தரை முழுதும் சலவைக் கற்கள் பளபளக்க, சுவர்களில் வண்ணச் சித்திரங்கள் கொஞ்ச, தலை நிமிர்ந்து ஆணவத்தோடு நின்றிருந்த பெரிய மாளிகை, காலச் சுழலில் சிக்கி, சலவைக் கற்களின் பளபளப்பு குன்றி, வண்ணச் சித்திரங்கள் மங்கி மறைந்து, சுவர்கள் உதிர்ந்து பிளந்து, மாடி சாய்ந்து மண்மேடாகிவிடுகிறது! அல்லியும் தாமரையும் பூத்துச் சிரித்து, காண்போரின் கண்ணையும் கருத்தையும் இழுத்த நீர் நிறைந்த குளம், நாளாவட்டத்தில் நீர் வற்றி, அல்லியும் தாமரையும் செத்து, சேருகி, யாரும் அருகில் நெருங்க முடியாத அளவிற்குத் துர்நாற்றம் வீசத் தொடங்குகிறது! உடலில் பொன்னொளியின் மினு மினுப்பும், வேல் விழிகளில் பொங்கித் ததும்பும் காதலும், இருண்டு சுருண்ட கூந்தலும், இளமை பூரித்துச் சிரிக்கும் உடற்கட்டும் கொண்ட கொடி இடை இளம்குமரி, ஆண்டுகளின் வளர்ச்சியில், கூந்தல் நரைத்து, கன்னம் ஒட்டி, கண்ணொளி மங்கி, கட்டுத் தளர்ந்து வெறுப்புச் சித்திரமாகி விடுகிறாள்!—கால மாற்றத்தில் இயற்கைத்தேவி புரியும் திரு நட

னம் இது! பாபம், இதனைக் கு
தம் அறியாள்! "இளம் வய
உனக்கு. உலக அனுபவம் உ
குக் கிடையாது. உலகம் இப்படி
பட்டது, இத்தகைய தன்மைய
என்பதையும் நீ அறியாய்!" என்
அவள் தந்தை அன்று கூறினே
அது ஒருவிதத்தில் உண்மைதான்
நீண்ட நாள் தோழனைப்போ
நடிப்பார்கள், கடைசியில் ஒருநா
நம்பியவனின் உள்ளம் ப
பதைக்கத் துரோகம் செய்துவி
வார்கள்! உதடுகள் சிரித்து
கொண்டே இருக்க, உள்ளத்தி
நஞ்சு ததும்பிக்கொண்டே இரு
கும். இது ஒரு வகையினர்! பை
தியக்காரர்களைப்போல தோ
மளிப்பார்கள் ஆனால் யாரை எப
டிக் கவிழ்க்கலாம் என்று திட்
கள் தீட்டிக்கொண் டிருப்பார்க
இது மற்றொரு வகையினர்! இ
ரிடமும் அன்யோன்யமாகப்பழ
தாக வேஷமிட்டு, இருவர் உள்
களிலும் விஷ வித்தைத் தூவி, வி
வித்து முளைத்துச் செடியாகி,
துக் காய்த்துக் கனிவதைக் கண
களிப்பார்கள் ஒரு சில சுயந
கள்! கள்ளங் கபடமற்று கல
வெனப் பேசும் சிலர், காரண
லாமலேயே பிறரது ஐயத்தி
ஆளாகி, துன்பப்படுவார்க
நல்ல உள்ளம் கொண்ட சி
கால மாற்றத்தில் ஒரு சிறிய
தியைப் பெரிய தாக்கிக்கொள்
காரணத்தால் கெட்டம
படைத்தவர்களாக மாறிவிடு
கள்!—இப்படி மக்களில் பல
ரகங்கள்! இவர்களை எல்
குமுதம் கண்டதில்லை! அ

(11-ம் பக்கம் பார்க்க)

நியூ ஜஸ்டிஸ் ஆண்டு மலர்
[ஆங்கிலம்]
27—6—48ல் வருகிறது!
தலைசிறந்த எழுத்தாளர்களின் கதைகள்
கவிதைகள் கட்டுரைகள் நிறைய உண்டு
விலை ரூபா 1-0-0
நியூ ஜஸ்டிஸ்—நமசிவாய முதலிதெரு—சென்னை 21.

பிரஞ்சு நாட்டுக் கதை:

# பேய்! பூதம்! பிசாசு!

[புதுவைச் சிவம்]

[பேய்! பூதம்! பிசாசு! மக்களை ஆட்டிப் படைக்கும் மூன்று சொற்கள் இவை. இவை வெறும் கற்பனை என்பது பகுத்தறிவாளர் முடிபு. அல்ல—இவை உண்மை என்பது பழமை விரும்பிகளின் மூடநம்பிக்கை. ஒரு முறை இரு பிரஞ்சுத் தோழர்கள் இது பற்றிப் பேசலாயினர். அப்போது, பேய் உண்டு என்பவனின் நம்பிக்கையை மாற்ற, இல்லை என்பவன், தன் தாயாரும் தந்தையாரும் ஒரு டாக்டரும் கூறியதாக மூன்று கதைகள் கூறுகிறான்.

**இதோ தந்தையார் கூறிய கதை:**

நான் இப்போது இறந்தவர் திரும்பிவரும் விஷயத்தைப் பற்றிச் சொல்லப்போகிறேன். இது மிகப் பயங்கரமானது. இக் கதையைக் கேடு புத்தியுள்ளவர்களும், மூடநம்பிக்கை கொண்டவர்களுந்தான் நன்கு உணரவேண்டும்.

போலோங் (Pologne) தேசத்துப் பழங்குடியில் தோன்றிய ஜவிஸ்கி (Zawiski) என்னும் இளவரசன், தன் காலத்தில் நடந்த புரட்சிக்குத் தலைவனாயிருந்தான். ஏனெனில், போலோங் தேசமானது அப்போது ரஷ்யர்கள் ஆட்சிக்கு உட்பட்டிருந்தது. ரஷ்யர்கள் ஆட்சியிலிருந்து விடுபட்டுச் சுயாட்சி பெறவேண்டுமென்பது ஜவிஸ்கியின் பேரவா! அப் புரட்சியில் ரஷ்யர்கள் வெற்றி பெற்றார்கள்! அதனால் ஜவிஸ்கி இளவரசனைத் தேசப்பிரஷ்டம் செய்துவிட்டார்கள் ரஷ்யர்கள். வயது முதிர்ந்த அவனது தாய், ஜவிஸ்கியைப் பின்பற்ற முடியாததால் போலோங் தேசத்திலேயே தங்கிவிட்டாள். தாய்க்குப் பிள்ளையைப் பார்க்கவேண்டுமென்ற ஏக்கம் மற்றதைவிட அதிகம். இதனால் ஜவிஸ்கியின் தாய் நோய் வாய்ப்பட்டாள். இதையறிந்த இளவரசன், திருட்டுத்தனமாகப் போலோங் தேசத்திற்குப் போய்த் தன்னால் கூடிய சிகிச்சையைத் தாய்க்குச் செய்துவந்தான்.

இச் சமயம் இளவரசன் எப்படியோ அடையாளம் கண்டு பிடிக்கப்பட்டுவிட்டான்! அதனால், உடனே, அரசாங்கத்தாரால் பிடிபட்டான். "ஜவிஸ்கி மறுபடியும் புரட்சிசெய்ய வந்திருக்கிறான்" என்ற குற்றத்தைச் சாட்டி, அவனுக்கு மரண தண்டனை விதித்தார்கள் ரஷ்யர்கள். போலோங் தேசத்தை ஆண்டுவரும் ரஷ்ய மன்னனான ஜார், தன் தளகர்த்தனான பஸ்கியேவிஷ் (Paskievisch) என்பவனுக்கு, ஜவிஸ்கியின் தண்டனையை நிறைவேற்றும்படி பூரண அதிகாரம் கொடுத்தான். அந்தத் தளகர்த்தனும் ஜார் மன்னனின் உத்திரவுப்படி, ஜவிஸ்கியின் தண்டனையை நிறைவேற்றிக்கொண்டிருந்தான்.

இச் செய்தி, எப்படியோ ஜவிஸ்கியின் தாய்க்கு எட்டிற்று! தன் அருமைப் பிள்ளையை—குற்றமற்ற பிள்ளையை மரண தண்டனைக்காளாக்கினார்களென்றால், பெற்றவள் மனம் என்னபாடு பட்டிருக்கும் என்பதைச் சொல்லவும் வேண்டுமோ? தன் உடல் நலிவையும் பாராது, உடனே ஒரு வண்டியிலேறித் தளகர்த்தனிடம் மிக விரைவாய் வந்து சேர்ந்தாள் ஜவிஸ்கியின தாய்.

வந்தவள் தளகர்த்தனைக் கண்டு, "என் பிள்ளை குற்றம்ற்றவன்; என் உதவிக்காக வந்தவன். ஆகையால் அவனுக்கு விதித்த தண்டனை கூடாது" என்று சொன்னாள். தளக்கர்த்தன் பதில் பேசாது, தண்டனையை நிறைவேற்றுங் காரியத்திலேயே ஈடுபட்டிருந்தான். கிழவி பதைத்தாள்! கெஞ்சினாள்! மன்றாடினாள்! தன் பிள்ளை குற்றமற்றவனெனப் பல உதாரணங்களோடும் ருசுப்பித்தாள். என்ன செய்தும் பலனென்ன?

தளகர்த்தன், "எது எப்படி இருந்தாலும் இவனுக்கு மரண தண்டனை விதிப்பது, மற்றவர்களுக்குத்தான் ஓர் உதாரணமாயிருக்கட்டுமே!" என்று மிக ஆணவத்தோடு விடை கூறினான்.

இவ் வார்த்தையைக் கேட்ட கிழவிக்குப் பாதி உயிர் போய்விட்டதென்றே சொல்லலாம்! மீண்டும் கிழவி தன் மனத்தை திடப்படுத்திக்கொண்டு, "என் பிள்ளை, தன் உயிரையே திரணமாக மதித்து இவ் வெல்லைக்குள் வந்ததற்குக் காரணம், அவன் என்மேல் வைத்த அன்பல்லவா! அதற்காக அவனைக் குற்றவாளியாக்கலாமா? நீங்கள் மனம் வைத்தால், என் பிள்ளைக்கு மன்னிப்புக் கொடுக்கலாம். உனக்கும் தாய் உண்டு! பிள்ளைக்காக சாகப்போகும் ஓர் தாயின் மனதைப் புண்படுத்தாதே!" என்று இறைஞ்சிக் கேட்டாள்.

இம் மொழிக்குத் தளகர்த்தன் இசையவில்லை. உடனே கிழவிக்குக் கோபமும் வீராவேசமும் எழுந்தன! அவள் தளகர்த்தனைப் பார்த்து, :—"நீ என் மட்டில் கொஞ்சங் கூட இரக்கம் வைக்கவில்லை. நல்லது! நானும் உன்மட்டில் அதுபோலவே இருப்பேன் என்பதை நீ உணர்! இப்போது நீ எனக்குத் தீங்கிழைக்கும் செயலை என்றும் உன் மனச்சாட்சி கண்டிக்கும்! இந்த மணி நேரத்தில் நடக்கும் காட்சி, உன் மரணத்தறுவாயில் தோன்றும், இது நிச்சயம்! மரணத் தறுவாயில் மனந் தடுமாறிக் கிடக்கும் சமயம், நீ என்னை நினைத்துப்பார்! நான் உயிருடனிருந்தாலும், அல்லது இறந்திருந்தாலும் உன் கண்முன் தோன்றுவேன்!" என்று மனம் நொந்து கூறினாள்.

உடனே தளகர்த்தன் தண்டனையை நிறைவேற்றினான்.

# திருப்பரங்குன்றம் எங்கே? எங்கே?

ஜூன் 21 திருப்பரங் குன்றத்தைக்கூவி அழைக்கிறது. ஆனால் திருப்பரங் குன்றத்தைக் காணோம்!

ஜூன் 21, "திருப்பரங் குன்றமே! அன்று நிமிர்ந்து நின்றாயே நீ! குன்றம் எனப் பெயர் படைத்திருந்தும் வான் முகட்டை எட்டுவேன் என்று எக்காளமிட்டாயே; இன்று என்ன சொல்கிறாய்? எங்கே நின்வீரம்? எங்கே நின் கொற்றம்? எங்கே நின் ஆர்ப்பாட்டம்? எங்கே எங்கே?" என்று திரும்பத் திரும்பக் கேட்கிறது. ஆனால் திருப்பரங்குன்றம் இருக்கும் இடமே தெரியவில்லை!

"குன்றமே! ஏ குன்றமே! திருப்பரங்குன்றமே! வா! வா! வா போர்க்களத்திற்கு! அன்று என்னை ஏசினாயே! ஊரெங்கும் அலர் தூற்றினாயே! உலகெங்கும் என்னை இழித்தும் பழித்தும் பேசினாயே! என்னை எதிர்த்து 'முகாம்' அமைத்தாயே! என்னை ஒழிப்பதற்காகப் பட்டாளம் திரட்டினாயே! இதோ பார் நான் எங்கே எவ்வளவு உயரத்தில் இருக்கிறேன் என்று! வா, வந்து பார் என்னை! என்னுடன் நீ போராட வேண்டாம், சும்மா வந்து பார் என்னை! பார், அது போதும்! பார், பார்! பார்க்க வா!" என்று ஜூன் 21 ஆயிரம் முறை அழைக்கிறது. ஆனால் திருப்பரங்குன்றம் ஏன் என்று கேட்கவில்லை! அது இருப்பதாகவே தெரியவில்லை!

"உன்னை வீழ்த்திவிட்டேன் என்று எக்காளமிட்டாயே! ஒழிந்தது உன் ஆட்சி என்று முழக்கம எழுப்பினாயே! தொலைந்தது உன் சூழ்ச்சி என்று "ராஜதந்திரம்" பேசினாயே! உலகம் போற்றும் உத்தமர்கள் என் பக்கம் இருந்துங்கூட என்னை ஏறிட்டுப் பார்க்க மறுத்தாயே! திருப்பரங்குன்றமே! இப்போது என்ன சொல்கிறாய்! சொல்லப்பா சொல்லு!" என்று ஜூன் 21 கேட்கிறது. ஒருமுறை அல்ல, இருமுறை அலல, நூறு முறை கேட்கிறது, ஆனால் திருப்பரங்குன்றம் எங்கே இருக்கிறது என்றே தெரியவில்லையே, பதில் எப்படிக் கிடைக்கும்?

ஜூன் 21 அப்படியும் இப்படியும் பார்க்கிறது! தலையை ஒரு முறை மேலும் கீழும் ஆட்டிக் கொள்கிறது! பிறகு, தலை நிமிர்ந்து நிற்கிறது, என்னைப் பார் என் அழகைப் பார் என்று சொல்கிற "பாணி"யில்! ஜூன் 21-க்குக் களிப்பு, திருப்பரங் குன்றம் காணப்படவில்லை—தனக்குப் பயந்து மறைந்துவிட்டது — தனக்குத்தான் முழு வெற்றியும் — இனி, தனக்கு இணை யார் உண்டு என்று!

உண்மையிலேயே திருப்பரங் குன்றம் காணப்படவில்லைதான்! அது இருக்கும் இடமும் தெரியவில்லைதான்! அது மாயமாய் மறைந்து போய்விட்டதுபோல் தோன்றுவது மெய்தான்.

அன்பர் ஆச்சாரியார் ஜூன் 21-ல் இந்தியா என்றழைக்கப்படும் இந்தத் துணைக் கண்டத்தின் கவர்னர்—ஜெனரல் ஆகிறார். ஆச்சாரியார் இந்த நிலைக்கு உயர்த்தப்பட்டிருப்பது கண்டு நாம் உண்மையிலேயே பூரிப்படைகிறோம், வாழ்க ஆச்சாரியார் என்று அவருக்கு வாழ்த்துக் கூறவும் விரும்புகிறோம். திறமை, தியாகம், இடைவிடாத தொண்டு, ஓயாத உழைப்பு, நாட்டுக்காகத் தன் வாழ்வையே அர்ப்பணித்துவிட்டு சென்ற முப்பதாண்டுகளாக அரும்பணி ஆற்றிவரும் சிறப்பு ஆகியவற்றை எண்ணிடும்போது அன்பர் ஆச்சாரியார் இந்தப் பதவிக்கு மக மிகப் பொருததமானவர் என்பதை எவரும் மறுக்க முடியாது.

ஆனால் ஆச்சாரியார் தமிழர்களால் விரும்பப்படாதவர். தமிழ் நாட்டுக் காங்கிரசால் இரண்டு ஆண்டுகளுக்கு முன்னே வெறுத்து ஒதுக்கப்பட்டவர். அவர் இந்த மாகாணத்து காங்கிரசரால் தேவையில்லை என்று தள்ளப்பட்டவர். தமிழ் நாட்டுக் காங்கிரஸ் அவரைத் தன்னுடன் சேர்த்துக்கொள்ளவே மறுத்தது. அவ்வளவு தூரம் மக்களால் வெறுக்கப்பட்டவர் அவர்.

இரண்டு ஆண்டுகட்கு முன்னர் "திருப்பரங்குன்றம்" நடந்தது. ஆச்சாரியாரிடம் நாட்டின் ஆட்சிப் பீடத்தைத் தர தமிழ் நாட்டுக் காங்கிரஸ் மறுத்துவிட்டது. அவர் தமிழ் நாட்டில் பிறந்தவர். ஆனால் தமிழர்களின் நம்பிக்கையை இழந்துவிட்டவர். அந்த ஆண்டு மட்டுமல்ல, என்றென்றைக்குமே அவர் சென்னை மாகாணத்தின் பிரதமராக வர முடியாத நிலை ஏற்பட்டுவிட்டது அன்று! தமிழ் நாட்டுக் காங்கிரசின் தீர்ப்பு, "தேசியத்" தமிழர்களின் தீர்ப்பு, ஆளவந்தார் குழுவிலே அவர் இருத்தல் ஆகாது என்பது! ஆம்! ஜனநாயகம் தீர்ப்பளித்தது ஆச்சாரியார் அரசுகட்டில் ஏறக்கூடாது என்று! ஏறமுடியவில்லை அவ

ரால் ஆட்சிப் பீடத்தின் மீது! பிரசார பீரங்கிகள் அவர் பக்கம். பல பத்திரிகைகளின் கொட்டு முழக்கம் அவர் பக்கம். மேல் இடத்துச் செல்வாக்கு அவர் பக்கம். மகாத்மாக்களின் அன்பும் ஆதரவும் அவர் பக்கம். சூது சூழ்ச்சி—இவை இரண்டையும் சொந்த சொத்தாகப் பெற்றுள்ள முப்புரியாளர்களின் முழு ஆதரவு அவருக்கு! என்றாலுங்கூட அவர் தோற்றார்! தமிழகத்தில் அவர் தலைநிமிர்ந்து நிற்க முடியவில்லை! அவருடைய செல்வாக்கு இங்கு பயன் படவில்லை! மக்கள் மன்றம் அவர் தேவையில்லை என்று கூறிவிட்டது.

எந்த ஆச்சாரியாரைத் தேவையில்லை என்று தமிழகம் ஒதுக்கித் தள்ளி விட்டதோ, எந்த ஆச்சாரியார் பதவிக்கு வருவது நாட்டுக்கு நஷ்டம் என்று தமிழ்நாட்டுக் காங்கிரஸ் முடிவு கட்டிற்றோ, எந்த ஆச்சாரியாரிடம் தங்கள் நாட்டாட்சியைத் தர தேசியத் தமிழர்கள் மறுத்துவிட்டனரோ, எந்த ஆச்சாரியார் துரோகி என்றும் உற்றநேரத்தில் போர்க்களத்தினின்று பின்வாங்கி மறைந்து போனவர் என்றும், பார்ப்பனீய செல்வாக்குக்கே பாடுபடுகின்ற மனமும் குணமும் படைத்தவர் என்றும் தென்னாட்டவர்களால் சித்தரிக்கப் பட்டாரோ, எந்த ஆச்சாரியார் பதவிக்கு வந்தால் அது தமிழர்கட்கு அவமானம் என்று காங்கிரஸ் தமிழகம் கருதிற்றோ, அதே ஆச்சாரியாரை இன்று உச்சாணிக் கொப்பிலே ஏற்றி வைத்திருக்கிறது, வடநாட்டுக் காங்கிரஸ்!

அவர் அந்தப் பதவிக்குப் பொருத்தமானவரா அல்லவா என்பதல்ல பிரச்சினை—அந்தப் பதவிக்கு அவர் உண்மையிலே ஏற்றவர்தான்—ஆனால் மக்களால் வெறுக்கப் பட்டவரை, அத்தகைய உயர்பதவிக்குஉயர்த்தலாமா—இது நீதியா—இது ஜனநாயகப் பாதையா—இபபடி நடந்துகொள்வதற்கு மக்கள் உணர்ச்சிககு மதிப்புக் கொடுப்பதாக அர்த்தமா—அல்லது மக்கள் உரிமைபற்றி சிறிதும் கவலைப்படாமல் தாம் இட்டதே சட்டம் என்று நடந்துகொள்ளும் பழைய பிரிட்டிஷ் ஏகாதிபத்தியப் பாதையில் நடப்பதாக அர்த்தமா என்பதுதான் கேள்வி.

எவரைத் தமிழகம் வேண்டாம் என்று கூறுகிறம்தா அவரையே வடநாடு பிடிவாதமாக முனைந்து நின்று முடிசூட்டுவது என்று கூறினால் இது ஜனநாயகக் கொலை மட்டுமல்ல, தமிழகத்தை வடநாடு எவ்வளவு துச்சமாக எண்ணி நடக்கிறது என்பதற்கு ஓர் அருமையான எடுத்துக் காட்டுகூட.

“தென்னாடே! நீ வீணே துள்ளாதே! ஆச்சாரியாரை வேண்டாம் என்று கூற நீ யார்? உனக்கு என்ன அதிகாரம்? ஆளப் பிறந்தவர்கள் எங்கள் இனத்தார்! எங்கள் ஆணைக்கு அடங்கிக் கிடக்கப் பிறந்தவர்கள் உங்கள் இனத்தார்! இதுதான் தற்கால அரசியல் நிலை என்பது உனக்குத் தெரியாதா? தெரிந்துமா துள்ளுகிறாய்! இதோ பார் நீ வேண்டாம் என்று வெறுத்துக் கூறிய ஆச்சாரியாரை நான் எவ்வளவு உயரத்தில் நிறுத்தி இருக்கிறேன்! நீ என்ன செய்ய முடியும் இப்போது? உன்னால்என்ன ஆகும்? தென்னாடே, உன்னால் என்ன ஆகும்?” என்று வடநாடு தென்னாட்டைப் பார்த்துக் கேட்கவில்லையே தவிர, அன்பர் ஆச்சாரியார் ஜூன் 21-ம் நாள் கவர்னர் ஜெனரல மாளிகைக்குக் குடி போகிறார் என்று பத்திரிகையில் சேதி வருகிறதே, அந்தச் சேதிக்கு அதுதான் அர்த்தம்.

உண்மையிலேயே, இன்றைய ஆட்சி முறையின்கீழ் டில்லி கூப்பிட்ட குரலுக்கு ஏன் என்று கேட்கும் ஏவலாளாகத்தான் சென்னை இருக்க முடியும். இல்லையானால் சென்னை, தென்னாடு, முழுமனதுடன் ஒதுக்கித் தள்ளியவரை, டில்லி, வடநாடு, முடிசூட்டியிருக்காது. நிச்சயம் முடிசூட்டியிருககாது.

“தமிழ் நாட்டைச் சேர்ந்த ஒருவர் இந்தியாவின் கவர்னர் ஜெனரலாக இருப்பது தமிழகத்துக்குப் பெருமைதானே! சுதந்தர இந்தியாவின் முதல் கவர்னர் ஜெனரல் பதவி தமிழகத்துக்குக் கிடைத்தது என்றால் தமிழர் பூரிப்படைவது தானே நியாயம்! களிப்புறுவது தானே நம் கடமை” என்று தமிழர் சிலர் எண்ணிக் களிக்கலாம். ஆனால் அது ஏமாளித்தனம் தவிர வேறில்லை. தமிழர்களுடைய நம்பிக்கையைப் பெற்ற ஒருவரை, தமிழர்கள் விரும்பும் ஒருவரை, தமிழர்களுடைய உள்ளத்திலே குடியேறி இருக்கும் மாவீரர் ஒருவரை கவர்னர் ஜெனரலாக ஆக்கி இருந்தால், அப்போது, தமிழர், பூரிப்படைவது இயற்கை, நியாயம், கடமை. ஆனால் இப்போது நிகழ்ந்திருப்பது அதுவல்ல. தமிழர்களுடைய வெறுப்புக்கு ஆளான ஒருவர், தமிழ்நாட்டு அரசியலிலே உலவுவதற்கே இடமின்றித் “தூரதேசத்”திற்குப் பயணம் தொடங்கித் தீரவேண்டிய நிலைக்குத் தமிழர்களால் துரத்தப்பட்ட ஒருவர், ஆச்சாரியார், இன்று கவர்னர் ஜெனரலாகி

(9-ம் பக்கம் பார்க்க)

போர்வாள்

19—6—48 சனிக்கிழமை

# கடல் அலையே! அடங்கு!

"அலையே, அடங்கு!"

"கடல் அலையே, அடங்கு!"

"ஏ அலையே, உன்னைத்தான்! அடங்கு சீக்கிரம்! ஆணவம் பிடித்து அலையாதே!"

"சுருண்டு சுருண்டு மடங்கி வீழ்ந்து எழுந்து நிமிர்ந்து துள்ளிக் குதித்து ஆநந்தத் தாண்டவம் புரிந்திடும் அலையே, வீணே நீ வம்பை வளர்த்துக் கொள்ளாதே!, நான் சொல்கிறேன், அடங்கி விடு!"

"இங்கிலாந்து என்ற தங்கக் குடத்தை இடுப்பிலே ஏந்திக்கொண்டு, இடை குலுங்கக் குலுங்க நடந்து செல்லும் கடல் தேவியின் இதழோரத்தில் அரும்பும் குமிழ்சிரிப்புப் பேரலையே, நிறுத்து உன் அட்டகாசத்தை! நிறுத்து உன் ஓயாத இரைச்சலை! நிறுத்து உன்னுடைய சலசலப்பை!"

"அலையே! நான் யார் தெரியுமா? மன்னன்! பல மன்னாதி மன்னர்களின் மணி மகுடங்கள் என் கழலடிகளை முத்தமிட, அந்த முத்தத்தை சீ! இதென்ன சத்தம் என்று உதறித் தள்ளிடும் மண்டலாதிபதி! எட்டுத் திசையெங்கும் கொட்டிடும் முரசங்கள் என் புகழைத்தான் நித்த நித்தம் பரப்பும். என்னுடைய விரல் அசைந்தால் இந்த உலகமே அசையும். என்னுடைய கண் சிமிட்டினால் பட்டாளங்கள் பல்லாயிரம் பவனி வரும். என்னுடைய தலை சற்றே நிமிர்ந்தால், பார் முழுதும் உள்ள சீமான்களின் தலைகள் உடனே தாழ்ந்து பணிந்திடும். என்னுடைய வார்த்தை ஒவ்வொன்றும் ஒரு கட்டளை இந்த உலகத்திற்கு! என்னுடைய சித்தம், மக்களின் பாக்கியம்! உலகமே என் காலடியில் கிடக்கும்போது அலையே நீ எம்மாத்திரம்? அடங்கு! உம்! சீக்கிரம்!"

"நீ தாமதிக்கிற ஒவ்வொரு விநாடியும் உனக்குப் பேராபத்தைத்தான் தரும்! அதோ பார் அந்த ஸ்காட்லாந்து மலைப்புறங்களிலே குவிந்துள்ள எலும்பு மலைகளை! அவற்றின் அருகே அதோ கரைபுரண்டு ஓடுகின்ற அந்த இரத்த வெள்ளத்தைப் பார்! அந்த இரத்த வெள்ளத்திலே உள்ள ஒவ்வொரு துளியையும் கேள்! அவை சொல்லும் அடுக்கடுக்காக, அழகாக, இந்த கான்யூட் மன்னனின் பராக்கிரமத்தை! அந்த எலும்பு மலைகளைப் புரட்டிப் புரட்டிப் பார்த்து ஒவ்வொரு எலும்பையும் தட்டித் தட்டிக் கேள்! ஒவ்வொன்றும் ஒரு காவியமே பாடிவிடும் என்னுடைய திண்தோள் வன்மையைப் பற்றி! என் ஆணையைத் துச்சமென எண்ணிய தூர்த்தரின் கதி அது! ஆணவக்காரர்களின் கதி அது! அலையே! நீயுமா அந்தக் கதி அடையப் போகிறாய்? வேண்டாம்! அழகிய அலையே! வேண்டாம்! நீலத் திரைக்கடல் ஓரத்திலே நின்று நித்தம் விளையாடும் அலையே! மமதை பிடித்து அலையாதே! என்னைப்பார் என் வீரத்தைப் பார் என்று கூவாதே! எல்லாம் தெரிந்தவன்போல் கொக்கரிக்காதே!"

"அலையே! அடங்கு! கடல அலையே! அடங்கு!"

அவன் சொன்னான்! மறுபடியும சொன்னான்! மறுபடியும் மறுபடியும் சொன்னான்! ஆயிரம் ஆயிரம் முறை சொன்னான்! கடல் அலையே அடங்கு அடங்கு என்று ஆத்திரக் குரலில் அண்டம் அதிரக் கூவினான்! கூவினானா, இல்லை, கட்டளையிட்டான்! ஆணை பிறப்பித்தான்! ஆணவத்தோடு நிமிர்ந்து நின்று, அதிகாரக் குரலிலே, அடங்கிடு கடலே என்று கொக்கரித்தான்!

அலை அடங்கவில்லை! அவன் எத்தனை முறை கூவியும் அது அடங்கவில்லை! கவிஞர் உள்ளத்தில் சிந்தனைச் சித்திரங்கள் ஓயாது ஒழியாது தோன்றிக்கொண்டே இருப்பதுபோல, அலை வெண்முத்துக்களை வாரி வாரி வீசிக்கொண்டே இருந்தது! மறுபடியும் மறுபடியும் சுருண்டு சுருண்டு படுத்துப் படுத்து எழுந்து எழுந்து விளையாடிக்கொண்டே இருந்தது! மீண்டும் மீண்டும் தன் "இலட்சிய கீத"த்தை(!) முழங்கிக் கொண்டே இருந்தது!

அலை ஓயவில்லை! மன்னன் மிரட்டிப் பார்த்தான் கொதிப்பேறிய உள்ளத்திலிருந்து கனல் கக்கும் வார்த்தைகளை எடுத்து வீசிப் பார்த்தான்! ஆவேசத்தோடு சபித்துப் பார்த்தான்! என்ன ஆரும் தெ

புமா ஜாக்கிரதை என்று எச்சரித்துப் பார்த்தான்! பணிவோடும் அன்போடும் உருக்கமாகவும் பேசிப் பார்த்தான்! இறுதியில் கெஞ்சியும் பார்த்தான்! அலை அடங்கவில்லை. எப்படி அடங்கும்! அடங்குவது அதன் இயல்பு அல்லவே!

இங்கிலாந்திலே பல நூற்றுண்டுகளுக்கு முன்னுல் வாழ்ந்தான் கான்யூட் என்றோர் மன்னன்! தன்னுடைய ஆணையை மீறி நடக்கக் கூடியவர்கள் அகில உலகிலும் கிடையாது என்பது அவனுடைய சித்தாந்தம்! "ஆம் அரசே! அனைவரையும் அடக்குவீர்! எத்தகைய வீராதி வீரரையும் உம் அடிப்படுத்துவீர்! அரசாளுமன்றம் ஏறிக் கோல் ஓச்சிய மன்னரையெல்லாம் உம தாள்மீது மலர் ஓச்சச் செய்திடுவீர்! உம் பெயர் கேட்டாலே எவரும் நடுங்குவர்! ஆனல் ஒன்று! அதோ தெரிகிறதே கடல் அலையின் ஓயாத கொந்தளிப்பு! அதை மட்டும் உம்மால் அடக்கமுடியாது!" என்று எவரோ கூறினர்! முடியாது என்பது என் அகராதியில் இல்லை என்று கர்ஜித்தான் மன்னன்! புறப்பட்டான் கடற்கரைக்கு! சிம்மாதனத்தைக் கடலுக்கு எதிரில் போடவைத்தான். அமர்ந்தான் அதன்மீது. "இதோ பார் நான் கட்டளையிட்டதும் அலை அடங்குவதை! இந்த கான்யூட்டின் கட்டளையைத் தட்டி நடக்கும் தைரியம் இந்த அலைகளுக்கா உண்டு?" என்று கேலிக் குரலில் கேட்டான், தன்னைச் சூழ நின்றவர்களைப் பார்த்து! தொண்டையைக் கனைத்துக் கொண்டான்! முத்தான வாய் திறந்தான்! மொழிந்தான் அலையே அடங்கு என்று! அலை அடங்கவில்லை! திகைத்தான்! சொன்ன சொல் காதில் ஏறவில்லைபோலும் என்று மீண்டும் கூறினன். இல்லை! அலை அடங்கவில்லை! திடுக்கிட்டுவிட்டான்—பண்டித நேரு சென்ற வாரம் திடுக்கிட்டுவிட்டாரே மாகாணப் பற்று வளர்வது கண்டு அதுபோல!

மன்னன் கான்யூட் மடமையின் உருவம்! அவன் அறியான் அலையின் இயல்பு ஓயாது விளையாடிக் கொண்டிருப்பதுதான் என்பதனை. எனவே தான் அதனை அடக்க முடியுமென்று நம்பினன், பிறர் முன்னிலையில் சபதமும் கூறினன், இறுதியில் பிறர் கேலிக்கு ஆளானன்! அது மட்டுமா, வரலாற்றுச் சுவடியிலே என்றும் அழியாததோர் இடம் பெற்றுவிட்டான் மரமண்டை படைத்த மன்னன் என்ற முறையில்!

*       *       *

கான்யூட்டுகள் அந்தக் கால்த்தில் மட்டும்தான் உண்டு என்பதில்லை. இந்தக் காலத்திலும் உண்டு! இங்கிலாந்தில் மட்டும்தான் அவர்கள் உலவுவார்கள் என்பதில்லை! எங்கும், எந்த நாட்டிலும், எத்தகைய இடாரத்திலும் உலவுவார்கள். மன்னர் பரம்பரையிலே மட்டும் தான் கான்யூட்கள் உதிக்க வேண்டும் என்ற நியதி இல்லை! எந்தப் பரம்பரையிலேயும் உண்டு அவர்கள்!

*       *       *

சென்னை தேசிய சர்க்கார் ஜுன் 2-ந் தேதி ஓர் உத்தரவைப் பிறப்பித்துள்ளார்கள்—விபரீதமான உத்தரவு! மிக மிக விசித்திரமான உத்தரவுங்கூட! மன்னன் கான்யூட் பிறப்பித்த உத்தரவுகூட அவ்வளவு வேடிக்கையான தல்ல! ஆனல் சென்னை சர்க்காரின் ஜுன் 2-ந் தேதியிட்ட உத்தரவு உண்மையிலேயே வேடிக்கையானது! மறைந்த மன்னன் கான்யூட், இந்நாள், கல்லறையிலிருந்து வெளியே வர முடியுமானல் அவன் கூட கண்டு நகைக்கக் கூடிய அளவுக்குக் கோமாளித்தனம் நிரம்பிய உத்தரவு!

கான்யூட் கடல் அலையே அடங்கு என்று ஆணையிட்டான்! சென்னை சர்க்கார் தங்களுடைய ஜுன் 2-ந் தேதி உத்தரவில் தென்றலே வீசாதே என்கின்றனர். யாழே! நீ இன்னிசை பரப்பாதே என்று சொல்கின்றனர். தமிழே! உலவாதே என்று ஆணை பிறப்பிக்கின்றனர். கட்டிக் கரும்பே நீ ஒழிந்துபோ என்று "சாபம்" தருகின்றனர். உண்ண உண்ணத் தெவிட்டாத மலைத்தேனே—நீ கடை வீதிக்கு வருவது சட்டப்படி குற்றம் என்று வியாக்யானம் செய்கின்றனர். வாழ்வின் விளக்கம் எனத்தகும் கலையே, நீ இந்நாட்டுக்குத் தேவை இலையே என்று பேசுகின்றனர். ஆணை பிறப்பித்துவிட்டு, அதற்கான "ராக ஆலாபனம்" செய்ததோடு நிற்கவில்லை சென்னை அரசியலார், சிற்சில கடைகளுக்கு அதிகாரிகளை அனுப்பி, "இத்துணை சுவையான கரும்பை விற்பது குற்றமய்யா—இதனைப் பறிமுதல் செய்ய வேண்டும் என்பது சர்க்கார் ஆணை அய்யா" என்று சொல்லி, கரும்புக் குவியலைப் பறிமுதல் செய்துவரச்செய்திருக்கின்றனர். அந்த அதிகாரிகள், கடைவியாபாரிகளிடம், "சர்க்கார் கட்டளைப்படி இந்தக் கரும்புகளைப் பறிமுதல் செய்துள்ளேன்" என்று எழுதி கையெழுத்தும் போட்டுள்ளனர்!

உண்மை! வெறும் கட்டுக்கதை இல்லை! சென்னை அரசியலார் கட்டிக் கரும்புகளைப் பறிமுதல் செய்திருக்கின்றனர்—சென்னையில்! ஜுன் 9ந் தேதி! பறிமுதல் செய்யவேண்டும் என்று உத்திரவு பிறந்த நாள் ஜுன் 2! பறிமுதல் ஆன நாள் ஜுன் 9! இடையே ஏழு நாட்கள், இத்தகு செயல் புரிவது பித்தர் எனும் ப்பெயரை நமக்குத் தருமே—நம்மை கிண்டலுக்கும் கேலிக்கும் உள்ளாக்குமே—நாடு சிரிக்குமே நம் செயல் கண்டு—நாகரிகமான செயல் அல்லவே இது—என் செய்வது! ஆரிய அரவம் நம்மீது சீறிய வண்ணம் உள்ளதே—இதைக்கூடச் செய்யவில்லையேல் அது நம்மீது பாய்ந்து தீண்டினலும் தீண்டிவிடுமே—ஆகவே பறிமுதல் செய்யத்தான் வேண்டும்—ஆனல் பறிமுதல் செய்வது விசித்திரமானதுதான்" என்று பற்பலவாறு எண்ணமிட்டு ஏங்கி நின்றனர் போலும் சென்னை சர்க்கார்! பாவம்! அவர்கள்தான் என் செய்வர்? ஒரு புறம், ஆரியம், சர்க்காரின் குரல்வளையைப் பிடித்து அழுத்தித் திருகியவண்ணம் உள்ளது; மற்றோர் புறம் அவர்களுடைய மனச்சான்று, "ஐயோ! இந்த ஆரியம் ஆணையிடுவதுபோல் செய்வது நம் சொந்த இனத்திற்குத் துரோகம் செய்வதாக ஆகுமே! இது தகாதே!" என்று மெல்லிய குரலில் முணுமுணுத்த வண்ணம் இருக்கிறது! சிற்சில சமயம் தம் மனச்சான்று கூறுவதுபோல நடந்துவிடுகின்றனர். ஆனல் பெரிதும் ஆரியம் ஆணையிடுவதற்கு ஏற்பத்தான் செயலாற்றுகின்றனர். இல்லையேல் ஆரியம் அவர்களுடைய உயிரை உறுஞ்சிவிடும். ஆகவேதான் ஆரியத்திடம் அவ்வளவு அச்சம் அவர்களுக்கு!

இவ்வாறு சென்னை அரசியலார்க்கு ஆரிய அச்சம் மேலோங்கி சொந்த மனச்சான்று குனிந்து கொடுத்த வேளையிலே பிறந்த பல உத்தரவுகளிலே ஒன்றுதான் "கரும்பே! நீ பறிமுதல் ஆனாய்" என்பதுவும்.

ஆம்! ஜூன் 2ல் உத்தரவு போடப்பட்டு ஜூன் 9ல் கரும்பு பறிமுதல் செய்யப்பட்டுவிட்டது!

கரும்பு என்றால் சாதாரணக் கரும்பு அல்ல அது! கிடைத்தற்கு அரியது! ஒவ்வொரு கணுவிலும் ஒரு கடல் இன்பம் செறிந்துள்ள பெற்றி வாய்ந்தது. தேனில் ஊறி யெழும் இன்சுவை, தென்றலில் தவழ்ந் துவரும் ஆநந்தம், யாழில் தெறிக்கும் நல்லிசை, செந் தமிழ்ல் ஒளிவீசும் கருத்துச் செதில்கள் இவ்வளவை யும் கூட்டி எடுத்து வடித்து இறக்கிய சுவை மிகு பொருள் போன்றது அந்தக் கரும்பின் சாறு! அந்தக் கரும்புக்கு நாட்டிலே வழங்கும் பெயர் **இராவண காவியம்** என்பது! மக்கள் உள்ளத்திலே குடியேறி விட்ட பெயர் திராவிட நாகரிகத்தின் அடையாளச் சின்னம் என்பது! உண்மையைச் சொல்வதானாலோ அது வருங்காலத் திராவிடத்தின் நுழைவு வாயில்! அதனைத்தான் ஓமந்தூரார் ஆட்சி பறிமுதல் செய் துள்ளது! "பாவம்! அவர்கள் இன்னது செய்கிறோம் என்று அறியாமல் செய்கின்றனர்! அவர்கள் மன் னிக்கப்படட்டும்!"

இராவண காவியம் தமிழர் பண்பாட்டின் விளக்கம். ஆரிய சூழ்ச்சி அன்றோர் நாள் தமிழ் வீரத்தைச் சாய்த்த கொடுமையைச் சுவைபடக் கூறும் எழில்மிகு இலக்கியம். அற்புதமான எண்ணங்கள், அழகான சொல்லோவியங்கள், உள்ளத்தைத் தொட் டிழுக்கும் உன்னதமான கதைப் போக்கு இவை மூன்றையும் தமிழ்த் தேனிலே குழைத்துத் தந்திருக் கிறார் அதன் ஆசிரியர் **குழந்தை**. அந்தக் காவியத் தைப் பிரித்துப் படித்தால், ஒருபால், வீரம் ததும்பும். மற்றோர்பால் அழகு தவழும். ஓர் இடத்தில் இன்பம் கொஞ்சும். மற்றோரிடத்தில் சொல் அடுக்கு வந்து நின்று இன்ப நடம் புரியும். ஒரு புறத்தில் ஆரியர் கொடுமை அம்பலம் ஏறும். மறு புறத்தில் திராவி டத்தின் எழில் தன் நலம் காட்டும். வீரச் சுவை இன்பச் சுவை கருத்துச் சுவை என்னும் இம் மூன்றும் ஒன்றுடன் ஒன்று பின்னிக்கொண்டு நூல் முழுதும் ஓடி ஓடி விளையாடும். உண்மையிலேயே, இருபதாம் நூற்றாண்டின் இணையற்ற தமிழ் இலக்கியம் இராவண காவியம்!

அது இணையற்ற தமிழ் இலக்கியம் என்பதுகூட அல்ல முக்கியம், அந்தப் பெரும் புலவன் கம்பனால் தமிழர் பண்பாட்டிற்கு உண்டாக்கப்பட்ட அழியாத பழி துடைக்கப்பட்டுள்ளது அக் காவியத்தால்! ஆம்! அதுதான் அதன் தனிச் சிறப்பு. கம்பன், தன் முன் னோனை, தென்னவனை, சொந்த இனத்தோனை, இனத் தலைவனை, தீரனை, மாவீரனை, இராவணனை இழித்தும் பழித்தும் பதினாயிரம் பாடல் எழுதினான், அதன் மூலம் தமிழ் இனத்தின் தன்மானத்திற்கே மாசு தேடினான், தமிழர் வீரத்திற்குக் கல்லறை தேடினான், தமிழர் பண்பாட்டிற்கு இழிவு தேடினான், உண்மைத் தமிழர் ஆரியரைக் காணும்போதெல்லாம் என்றென்றைக்கும் தலை குனிந்து தீர வேண்டிய நிலையைத் தேடினான். அவன் சிறு புலவனாய் இருந்து இந்தச் சிறுமையைத் தேடி இருந்தாலும் பரவாயில்லை! பழியும் சிறி[...] இருந்திருக்கும்! அவனோ இணையற்ற புலவன், ஆக[...] அவனால் தமிழர் குலத்திற்கு நேர்ந்த இழிவும் இ[...] யற்றதாயிற்று! அந்த இழிவை ஒழித்தது இராவ[...] காவியம்.

கம்பன், தமிழர் மானத்திற்குத் தளைபூட்டின[...] அந்தத் தளையைத் தூள் தூளாய்த் தகர்த்தெறிந்[...] புலவர் குழந்தை. கம்பன் நம் தமிழை ஆரியச் சிறை[...] குள் தள்ளினான், சிறைச்சாலை என் செய்யும் என[...] பண்பாடிய வண்ணம் புலவர் குழந்தை சிறை செ[...] கிச்சென்றார், இராவண காவியம் என்ற படைய[...] டைக் கொண்டு சிறை மதில்களை இடித்துத் தள்ளி[...] உள்ளே புகுந்தார், தமிழுக்கு விடுதலை தந்தார், [...] ழர், கம்பனால் இழந்த மானத்தை மீட்டுத் தந்[...] தமிழருக்கு இன்பம் தந்தார், அவர்களுடைய கு[...] தலை நிமிர வழி வகுத்துத் தந்தார், "ஏ தமி[...] வாரீர்! உங்கள கவியரசன் கம்பன் எங்கள் கு[...] சிக்கு இரையானான், பாரீர்!" என்று இறுமாப்பு[...] கூறிவந்த ஆரியர்தம் ஆணவம் அடங்க, அவர்[...] தம் ஆர்ப்பாட்டம் குறைய, அவர்களுடைய கெ[...] ரிப்பு குறைய, புத்தம் புதிய இலக்கியத்தைத் தந்[...] எனவேதான் தமிழர் **இராவண காவியம்** என்ற செ[...] கேட்டதும் களிப்புக் கடலில் நீந்திடலாயினர்.

12-ம் நூற்றாண்டில் கம்பன் பிறந்தான், த[...] பிறந்த இனத்திற்குத் துரோகம் புரிந்தான், மா[...] னுக்கு மண்டியிட்டுப் பணிந்தான், பகைவர் புகழ்ப[...] தென் இலங்கை வேந்தன்—தமிழ வீரன் இராவ[...] னுக்கு இழிவும் கூறி நின்றான்.

20-ம் நூற்றாண்டில் தோழர் குழந்தை வந்[...] இன முன்னோன் இராவணனின் உண்மைப் புக[...] காவிய மாக்கித் தந்தார், அழியாப் புகழ் கொண்ட[...]

இராம காதை! இராவண காவியம்! இரண்[...] இரு சொற்களல்ல, இரண்டு காவியங்களின் பெ[...] கள் மட்டுமே அல்ல! இரு துருவங்கள். இராமகா[...] ஆரிய சூழ்ச்சி திராவிட வீரத்தை வென்றது எ[...] தன் அடையாளச் சின்னம்! இராவண காவிய[...] ழர் விழித்தெழுந்து விட்டனர், ஆரியத்தை, ஆரியர் [...] ச்சியை, அழித்தொழிக்க முனைந்து விட்டனர், இனி[...] யர் சூழ்ச்சி யில்லாது, நின்றாலும் வெல்லாது, வெ[...] லும் இரண்டொரு விநாடிக்கு மேல் வாழாது என்ப[...] குரிய அடையாளச் சின்னம்! இராம காதை ஆ[...] வெற்றிக்கு "லாலி" பாடுவது. இராவண காவி[...] திராவிடர் எழுச்சியைச் சித்தரித்துக்காட்டுவது. இ[...] காதையின் புகழ் ஓங்க ஓங்க ஆரிய வட்டார[...] களிப்புக் குரல் ஓங்கும். ஆனால் இராவண காவி[...] தோன்றிவிட்டது என்ற சொல் கேட்டாலே போ[...] ஆரியர் முகம் சுருங்கும், அவர்கள் உதடு முணுமு[...] கும், கண்கள் கனல் கக்கும். கைகள் ஐயோ அ[...] அலைந்து பாயும். உள்ளம், "ஒழிக" [...]ந்து பா[...] இராவணகாவியம் என்ற பெயரிலே மிகச்சி[...] தோர் இலக்கியம் தோன்றும் அளவுக்கு தமிழர் [...] ளத்திலே புரட்சிப் புயல் எழுந்து விட்டது என்ப[...] நினைக்க நினைக்க ஆரியர் மனம் புழுங்கும். ஆ[...] திராவிடர் மனம் துள்ளிக் குதிக்கும். இவர்க[...] ஆநந்தத்தைக் காணக்காண அவர்களின் மனப்பு[...] கம் அதிகரிக்கும். அந்த மனப் புழுக்கத்தின் வி[...] தான் "இராவண காவியத்" தடை உத்தரவு.

இராவண காவியம் தமிழர் இல்லந்தோறும் தவழ்ந்தி கண்டு, அடக்கொணு வேதனைகொண்டு, இதனல் மிகப் பாதகம் உண்டு—இதை அடக்குவதே நாள் நாம் செயத் தகும் தொண்டு எனும் நஞ்சினை மடவென மொண்டு உண்டு, ஆரியம், அரசிய ரை மிரட்டி, அவர்களிடமிருந்து தட்டிப் பறித் ளது இந்தத் தாக்கீதை.

ஆரியர்க்கு அஞ்சி நடுங்கிடும் போக்கு கொண்டு, ன்று, இராவண காவியமே—பரவாதே என்று 144 பட்டுவிட்டது ஓமந்தூரார் ஆட்சி! சில இடங்களில் ப்பனையாகிவந்த இராவண காவியச் சுவடிகளைப் றிமுதல் செய்துவிட்டது! இராவண காவியம் நாட் எங்கும் நடமாடக்கூடாது என்று ஆணை பிறப் த்துவிட்டது! சர்க்காரிடம் அதிகாரம் இருக்கிறது, ட்ட கட்டளையை நிறைவேற்ற ஏவலர்கள் ஏராளம், னவே உத்தரவு உடனே நிறைவேறிவிட்டது.

உத்தரவு நிறைவேறிவிட்டது—இராவண காவியம் டகளில் இருந்தால் பறிமுதல் செய் என்ற உத் வு! ஆனல் தவறிய தமிழர் சிலர் தவிர்த்த பிறர் ளத்கெல்லாம் தன் அழியாத முத்திரையைப் பதித்துவிட்டதே இராவண காவியம், அதை யார் ப்படிப் பறிமுதல் செய்ய முடியும்?

இராவண காவியம்—புத்தகத்திற்குத் தடைவிதிக்க லாம்! அது எளிது! எவரும் செய்யக்கூடியது! ஆனல் இராவண காவியமாகவே உருமாறிவிட்ட தமிழர் உள்ளம்—அதை யார் என்ன செய்ய முடியும்?

இராவண காவியத்தை இன்று தடை செய்துவிட்டார்கள். கருஞ்சட்டைப் "படை"யை நேற்று தடை செய்துவிட்டார்கள். போர்வாள் நாடகத்தை முன்னர் ஓர் நாள் தடுத்துவிட்டார்கள். பெரியார் பேருரைக்குப் பல இடங்களில் 144 போட்டிருக்கிறார்கள். கடைசியாக திராவிடர்தம் உரிமைப் போர்முரசு "விடுதலை"க்கும் ரூ. 2000 ஜாமீன் என்ற "கோட்டைல்" கொடுத்துவிட்டார்கள். சரி! அப்புறம்?

அப்புறம் என்ன? தடை என்றதும் தமிழர் எழுச்சி என்ற கடல் தன் கொந்தளிப்பை நிறுத்திவிடுமா என்ன? நிறுத்தாது என்பதுதான் இயற்கை விதி ஆயிற்றே!

கான்யூட் அரசன் அலையே அடங்கு என்று ஆணையிட்டுத்தான் பார்த்தான்—ஆனல் அலை அடங்கவில்லை!

நவீன கான்யூட்கள், இங்கே, தமிழகத்தில், அதைச் செய்து பார்க்கின்றனர். இங்குள்ள கடலிலேயும் அலை ஓயாது—நிச்சயம்!

---

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

! தமிழகம் யாரை குற்றவாளி ன்று கூறுகிறதோ அவரையே தியாக ஆக்க முடியும் தன் ல் என்பதைத் தமிழகத்திற் கூறவும், தமிழகத்தின் டி' தன்னிடம் சிக்கிக்கொண் ளது—தன்னை மீறி தமிழகம் துவும் செய்ய முடியாது— செய்யக்கூடாது என்பதைத் மிழகத்திற்கு நினைப்பூட்டவும், மிழகம் எந்தக் காரணத்தை ன்னிட்டாவது வட நா— ற்கு விருப்பமில்லாத முறை ல் நடக்கத் தொடங்குமானல் மிழகம் அடக்கப்படும், அவ னப்படுத்தப்படும், தமிழகத் ன் விருப்பம் நிறைவேற ாட்டாது தடுக்கப்படும்— து உறுதி என்பதை எடுத்துக் ட்டவும் வடநாட்டிற்குக் டைத்த ஓர் அருமையான சந் ப்பம், ஜூன் 21.

ஆச்சாரியார் கூடாது என்று ன்று திருப்பரங் குன்றத்தில் ய தமிழ் நாட்டுக் காங்கிரஸ் முழக்க மிட்டது. இன்று, இதோ, வடநாடு, அதே ஆச்சாரியாருக்கு ஆநந்த பவனம் அமைத்துத் தருகிறது. தமிழ் நாட்டுக் காங்கிரசை வேண்டுமென்றே அவமானப் படுத்துவது போன்றது இச் செயல். தென்னடு வட நாட்டிற்கு என்றென்றும் வளைந்து கொடுத்துத் தீரவேண்டுமே தவிர அதற்கென்று தனி வாழ்வு, கிடையாது, கூடாது, இருக்க விடமாட்டோம் என்பதை, வடநாடு, அழுத்தந் திருத்தமாக எடுத்துக் காட்டுகிறது இந் நியமனத்தின் மூலம். ஆம்! இந்த நியமனம் வடநாட்டுக் காங்கிரஸ் தென்னட்டுக் காங்கிரசுக்குத் தரும் அறைகூவல்! இந்த அறைகூவலுக்கு என்ன பதில் தரப் போகிறது, தென்னட்டுக் காங்கிரஸ்? மவுனம் தானு பதில்? மவுனம் தவிர வேறு பதில் இல்லையா? வேறு பதில் தரமுடியாதா தென்னட்டுக் காங்கிரசால்?

காமராஜர்களே, பக்தவச்சலங்களே, முத்துரங்கங்களே, புயல் போல் சீறிய ரஹீம்களே, சிவஞானங்களே, காங்கிரஸ் தமிழர்களே, என்ன செய்யப் போகிறீர்கள்? இதோ வடநாடு ஜூன் 21-ல் உங்களை நேரடியாக அவமானப் படுத்துகிறதே, இதற்கு நீங்கள் என்ன பரிகாரம் தேடப் போகிறீர்கள்?

உதைத்த காலுக்கு முத்தம் இடும் போக்குடன்தான் இனியும் நடந்து கொள்ளப் போகிறீர்களா? அல்லது "எங்களுக்கும் முதுகெலும்பு உண்டு" என்பதை வடநாட்டிற்கு அறிவிக்கப் போகிறீர்களா? என்ன செய்யப் போகிறீர்கள்?

ஆச்சாரியாரா, அவர் கூடவே கூடாது என்று அன்று உரத்த குரலில் உலகறிய முழங்கிய திருப்பரங்குன்றம் இன்று எங்கே? எங்கே இருக்கிறது இன்று? எங்கே—எங்கே?

---

**மதிப்புரைகள்**
அடுத்த இதழில்

Edited, Printed and Published by P. C. Manickavachagam alias Kanchi Manimoliyar
ree Printers 147, Coral Merchant St., Madras. JointEditor, M. Ilancheliyan B.A. (Hons).

ஜவிஸ்கி இளவரசன் அநியாயமாக மாண்டான்!

இந் நிகழ்ச்சிக்குப்பின் இருபத்து நான்கு வருடம் கழிந்தன! தளகர்த்தன் மூப்படைந்தான். அப்பருவத்தில் ஏற்படும் நோய், தளகர்த்தனைப் பிடித்தது. கைதேர்ந்த டாக்டர்களைக் கொண்டு அவன் நோயைப் போக்கப் பலர் முயற்சித்தனர். ஆனால் அம் முயற்சி வீணாயிற்று! நாளாக நாளாகத் தளகர்த்தனின் நிலை மிக மோசமாயிற்று. அவன் காணும் ஒவ்வொரு பயங்கரக் கனவுகளும் காட்சிகளும், அவனை மேலும் மேலும் மரணத் தறுவாய்க்கு அழைத்துச் சென்றது! அவன் அக் கனவுகளைப்பற்றி ஒவவொரு காலையிலும், ஆங்குள்ளவர்களிடத்தில்,

"ஓர் கிழவி—அதாவது ஜவிஸ்கியின் தாய், என்னருகில் வந்து தன் மகனைக் கேட்கிறாள். அவள் அடங்காக் கோபத்துடன் சதா என்னைப் பார்த்தபடியே இருக்கிறாள்! நான் செய்யும் சிறு விஷயங்களையெல்லாம் அவள் கவனிக்கிறாள்! பொழுது விடிந்தால்தான் அவள் என்னைவிட்டு அகல்கின்றாள்." என்று சொல்லிச் சொல்லி வருந்தலானான்.

இன்னும் அத் தளகர்த்தன், இரவில் நித்திரை செய்துகொண்டிருக்கும் போதே திடீரென அலறிப், "பார்த்தீர்களா! பார்த்தீர்களா! அவள் என்னை நெருங்குகிறாள். என்னைப் பிடிக்க வருகிறாள்! பார்த்தீர்களா!" எனச் சத்தமிட்டு ஸ்மரணையற்றவன் போல் கிடப்பான்.

இதுபோல் வெகுநாள்வரை, தளகர்த்தன் அவதியுற்றான். ஒரு நாள் இவன் மனக்கண் முன் கிழவி தோன்றினாள். அவள் முகத்தில் கோபப்பார்வை ஒன்றுமில்லை. தளகர்த்தனைப் பார்த்துக் கிழவி, "நீ செய்த குற்றத்தைப் பற்றி இப்போது வேதனையடைகிறாய்; ஆதலால் நான் உன்னை மன்னிக்கிறேன். இனி, நீ மன நிம்மதியோடு இறப்பாய்!" என்று சொல்லி மறைந்தாள்.

தளகர்த்தன் இவ்வாறு அவஸ்தைப் பட்டுக்கொண்டிருப்பதைக் கண்டு, அந்தக் கிழவியான ஜவிஸ்கியின் தாய் எங்கிருக்கிறாளென்று தேடி யலைந்தார்கள். கடைசியில் அக் கிழவி இறந்து பன்னிரண்டு வருடமாயிற்று எனத் தகவல் கிடைத்தது. பிறகு தளகர்த்தனும் மாண்டான்!

அப்பயங்கர உருவம் எப்படி அவன் முன் தோன்றியது? அவன் இறக்குந்தறுவாயில் அவனுடைய மனச்சாட்சியே, ஜவிஸ்கியின் தாய்போல் உருப்பெற்று அவனைத் தண்டித்தது. இவைதான் பயங்கரப் பேய்கள்! இறந்தபின் திரும்பி வருவார்களென்பதும் இதுதான்!

வாலிபத்திலும் வயோதிகத்திலும் ஒருவர் செய்யும் கொலை, பழி முதலிய தீயசெயல்களை அவர்கள் மறந்துவிட்டாலும், மனச்சாட்சியானது அவர்கள் இறக்குந்தறுவாயில் அத் தீச்செயல்களைக் கண்முன் தோற்றி இம்சிக்கும்! வாதைகளில் தன் மனச் சாட்சி தன்னையே கண்டிக்கும் வாதையே பொறுக்க முடியாதது!

பேய் என்றும் பிசாசு என்றும் பயப்படுகின்றவர்கள், ஒன்று பயங்கொள்ளிகளாக இருக்கவேண்டும். அல்லது குற்றவாளிகளாயிரு வேண்டும். பரிசுத்தமும் தெளிவு உடைய மனத்தினர் எதற்கும் பய பட வேண்டியதில்லை. யாதொ குற்றமும் நாம் செய்யாமலிருந்தா மனச்சாட்சி நம்மைக் கண்டி காது; நாம் பயப்படத் தேவையில்லை" என்று என் தகப்ப கூறித் தம்கதையை முடித்து கொண்டார்.

இப்போது சொல் நண்பா! இந் மூன்று உண்மை வரலாறுகளையு கேட்ட பிறகுமா நீ பேய் என் தாக ஒன்று உண்டு என்று நம் கிறாய்?

இவவாறு அவன் பேசி முடித் தும், அவனுடைய நண்பன் முக தில், இலேசாக ஒரு புன்ன தோன்றி மறைந்தது. அது பே நம்பும் பித்தன் அல்லன் நா என்று கூறுவதுபோன்றிருந்த ஆம்! பேயிடம் அவன் கொ டிருந்த மூட நம்பிக்கை எப் தோ மறைந்தொழிந்து விட்ட அவன் ஓர் பகுத்தறிவு வாதியா விட்டான்!


மா. இளஞ்செழியன் B. A. (Hons) தீட்டியது! ★ பாசறையின் புது வெளியீடு!

# தமிழன் தொடுத்த போர்!

★

1937—40-ம் ஆண்டுகளில் தமிழ் நாட்டையே அதிர்ந்தெழச்செய்த இந்தி எதிர்ப்புப் போராட்டம் நிகழ்ந்த வகையை உயிரோட்டமுள்ள நடையில் எடுத்துக் கூறும் உணர்ச்சிச் சித்திரம் இந் நூல்.

★

படைத் தளபதிகளைப் பற்றிய பேனாச் சித்திரங்கள்! ஏராளமான நிகழ்ச்சிக் குறிப்புகள்! தாளமுத்து—நடராசன் கல்லறை முதலான படங்கள்! தலைவர்களின் வீர உரைகள்! பெரியாரின் அரிய அணிந்துரை, அண்ணாவின் நீண்ட முன்னுரை இவ்வளவும் உண்டு.

240 பக்கங்கள் விலை ரூ. 1 12 0. தபாலில் ரூ. 2 0 0

பகுத்தறிவுப் பாசறை

பவழக்காரத் தெரு, சென்னை-1.

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

...கண்டது உலகில் ஒருவரைத்தான், அந்த ஒருவர்தான் குமார். குமார் தான் உலகம் என்று அவள் எண்ணினாள். அவளைப் பெறுத்தவரையில் அது உண்மைகூட! ஆனால் உண்மையில் உலகம் குமாருடன் முடிந்து விடுவதில்லையே! இது அவளுக்குத் தெரியாது, அவள் உலகமறியாப் பெண்! ஆகையால்தான் தன் தந்தையின் உள்ளம் ஏன் மாறிற்று, எப்படி மாறிற்று, எதற்காக மாறிற்று என்ற காரணங்களைக் கண்டறிய முடியாமல் விழித்து, விழிகளில் நீர் கசிந்தாள்.

மேற்கூறிய மக்களின் பலரகங்களில் கடைசி ரகத்தைச் சேர்ந்தவர் வையாபுரி. அவரது ஆசையின்படி குமார் வைத்தியத்திற்குப் படிக்காமல், ஓவியக் கலையைப் பயிலச்செல்லவே அவர் ஏமாற்றம் அடைந்தார்! இது சிறிய செய்திதான்! அவர் விரும்பினால் இதனை மறந்திருக்க முடியும். ஆனால் அவர் அப்படிச் செய்யவில்லை. இந்தச் சிறிய ஏமாற்றத்தை அடிக்கடி எண்ணலானார். இதன் காரணமாக அவரது நல்ல உள்ளம், கெட்ட மனமாக மாறிற்று! இந்த மாற்றம் குமுதத்திற்குப் புரியவில்லை! அனுபவமில்லா இளம்பெண்!

மனப் புயலில் சிக்கி, மனவேதனை அடைந்து கொண்டிருந்த குமுதம், அறையினுள் தந்தை வருவதை அறிந்து முகத்தை சேலையின் முனையினால் துடைத்துக் கொண்டு எழுந்து நின்றாள். வையாபுரி அருகில் வந்தார். அவர் கையில் ஒரு கிண்ணம் இருந்தது. அவர் முகம் ஏதோ ஒரு முடிவிற்கு வந்துவிட்டவரைப் போல தோற்றமளித்தது.

வையாபுரியின் முகத்தைப் பார்க்கவே அவளுக்குப் பயமாக இருந்தது! அந்த அளவிற்கு அவர் முகம் மாறியிருந்தது. மேலும் ஏதாகிலும் விபரீதம் நடக்கப் போகிறதோ என்றெண்ணி அவள் இளம் உள்ளம் சிலிர்த்தது! அமைதி நிறைந்த அவர் கண்களில் அன்று ஏதோ ஒருவித ஒளி வீசுவதைக் காணக்காண அவள் உயிர் பதைபதைத்தது. அவள் மனதில் பெரும் புயல் சுற்றிச் சுற்றி வீசத் தொடங்கியது. அவள் தன் உணர்ச்சிகளை அடக்கிக்கொண்டு "உட்காருங்கள் அப்பா!" என்று நடுநடுங்கும் மெல்லிய குரலில் கூறினாள்.

"உட்கார வரவில்லை குமுதம்! உன்னிடம் என் முடிவைச் சொல்ல வந்திருக்கிறேன்" என்று உறுதி நிறைந்த குரலில் உரைத்தார் வைத்தியர்.

தந்தையின் கையில் ஏன் கிண்ணமிருக்கிறது, அதில் என்ன இருக்கிறது என்பதொன்றும் புரியாமல் குமுதம் மிரண்டாள். அவள் கண்கள் அக் கிண்ணத்தையே மிரள மிரளப் பார்த்தன.

இளங் குமரியின் செவ்விய இதழ்கள் அசையத் தொடங்கின!

"கையில் இருப்பது என்ன அப்பா?"

"நம் மிருவர் உள்ளங்களிலுமுள்ள அன்பைப் பரிசோதித்து, இரண்டையும் ஒன்றாக்கவோ அல்லது பிரிக்கவோ தீர்ப்புக்கூற இடையில் வந்திருக்கும் நீதிபதி!"

"ஒன்றும் எனக்குப் புரியவில்லையே!"

"உனக்கு எதுதான் குமுதம் புரிகிறது? உன் பொறுப்பு உனக்குப் புரிகிறதா? உன்னைப் பெற்று வளர்த்த தந்தை ஏன் இப்படியெல்லாம் வேண்டுகிறான் என்பதாவது புரிகிறதா? நான் படும் வேதனை உனக்குத் தெரிகிறதா? நம் குடும்பத்தின் அந்தஸ்தாவது உனக்குத் தெரிகிறதா? கொலைகாரன் ஒருவனை மணப்பது கேவலம், உற்றாரும் ஊராரும் மதியார்கள், தூற்றுவார்கள் என்ற விவரம் உனக்குச் சிறிதாவது புரிகிறதா? அல்லது........"

"அப்பா?"

"குமுதம்! இதோ பார்! என் கையிலிருப்பது விஷம்! உன்னை நான் அடிக்கடி தொந்திரவு செய்துகொண்டிருக்க விரும்பவில்லை! நான் திடமான ஒரு முடிவிற்கு வந்துவிட்டேன்! குமாரை நீ மணப்பது! என்பது முடியாத காரியம். கொலை செய்துவிட்டு, தலைமறைந்து வாழும் ஒருவன் என் மருமகனாக வருவதைச் சகித்துக் கொள்ள என்னால் முடியாது! அதைவிட நான் சாவதே நல்லது!........"

"அப்பா!"

"இனி மேலும் மேலும் சொன்னதையே சொல்லிக்கொண்டிருக்க நான் விரும்பவில்லை. நான் பெற்ற ஆசை மகள் நீ! உன் தந்தை நான்! என் விருப்பத்தின்படி சிவனை நீ மணந்து கொண்டால், உன் தந்தையின் உயிரைக் காப்பாற்றியவளாவாய். குமார்தான் உனக்குத் தேவை என்றால், இந்த நொடியே உன்னைப் பெற்ற என்னை மறந்துவிடு! எனக்கு இதோ, இதோ, இந்த விஷக் கிண்ணம் விடுதலை அளிக்கும்!"

"வேண்டாம் அப்பா!"

"என்ன குழந்தாய் வேண்டாம்?"

"விஷம்........"

"நிரயோசித்துத்தான் விஷக்கிண்ணத்தைக் கையில் எடுத்தேன்!"

"அப்பா!"

"ஏனம்மா, உனக்கு யார்வேண்டும்? கொலைகாரன் குமாரா அல்லது கண்ணீர் சிந்தும் உன் தந்தையா? அதனை விரைவாகக் கூறிவிடு! குமுதம், உன் அன்பிற்கு என் உயிர் ஊசலாடிக்கொண்டிருக்கிறது! சிவன் கட்டும் தாலி உன் கழுத்தில் பிரகாசிக்கவேண்டும் அல்லது கிண்ணத்திலிருக்கும் விஷம் என் தொண்டையை எரித்துக்கொண்டே உள்ளே ஓடவேண்டும்! இது என்னுடைய முடிவு! குடல் வெந்து துடித்து இறக்கப் போகும் உன் தந்தையை மீட்கப் போகிறாயா? அல்லது குமார்தான் தேவை என்று கூறப் போகிறாயா? இரண்டில் ஒன்றை விரைவாக இப்பொழுதே கூறிவிடு......"

இப்படி ஆவேசம் வந்தவரைப் போல வையாபுரி பேசிக்கொண்டே போனார்.


# நாம் சூத்திரரா?

★

இதன் ஆசிரியர் இச்சிறு நூலில் யார் சூத்திரர் என்பதை ஆய்கிறார்.

★

| | |
|---|---|
| தனி இதழ் அணா | 0 4 0 |
| தபால் செலவு அணா | 0 0 9 |

★

விற்பனையாளருக்குத் தக்க கழிவு உண்டு.

★

## முத்தமிழ் நூலகம்

ஆம்பூர் (வ. ஆ.)

சென்னை மாவட்டம்.

குமுதத்தின் கண்களில் நீர் வடிந்தது! அவள் உடலெல்லாம் நடுங்கியது! அவள் உள்ளம் பட படத்தது! இந்த சங்கடமான நிலைமையிலிருந்து எப்படிச் சமாளிக்கப் போகிறோம் என்றெண்ணியதும் அவள் இதயத்தின் மெல்லிய சுவர்கள் தூள் தூளாகிவிடும்போலாகிவிட்டது!

எதிலும் பட்டதும் படாததுமாகவே காலம் கழித்து வருவார் வையாபுரி. ஆனால் சில நேரங்களில் அபூர்வமாக அற்ப செய்திகளுக்கெல்லாம் அடங்காத ஆத்திரம் அடைவார். யோசித்துத்தான் ஒரு முடிவிற்கு வருவார். ஒரு முடிவிற்கு வந்த பிறகு, பிறர் எவ்வளவுதான் நல்ல யோசனைகளைக் கூறினாலும் அதனை மாற்றவேமாட்டார். எப்படிப்பட்ட கஷ்ட நஷ்டத்தையும் பொருட் படுத்தாமல் அம்முடிவை நிறைவேற்றிவிடுவார். அவரை விட்டு நீங்காத பிறவிக்குணம் இது!

"உன் தந்தையே சொத்தை என்னிடம் கொண்டுவந்து தருவார். நான் வேண்டாமென்பேன். 'அப்படிச் சொல்லாதே! சொத்துக்கு நீதான் இனி சொந்தக்காரன்! கட்டாயம் அது உன்னிடம் தான் இருக்கவேண்டும்! கெஞ்சுகிறேன், மறுக்காதே!' என்று கெஞ்சிக் கூத்தாடி என்னிடம் கொடுத்து விடுவார்!........"

பழத்தூருக்குச் செல்வதற்கு முன்தினம் குமார் கூறிய இவ்வார்த்தைகள் குமுதத்தின் காதுகளில் வந்து வந்து ஒலித்தன! "ஆமாம் அத்தான்! தாங்கள் மட்டுமா அப்படி நினைத்தீர்? நானும் அப்படித்தான் நடக்குமென்று நம்பி இருந்தேன்! அப்பாவின் மனம் இப்படித் திடீரென்று மாறிவிடுமென்று யார்தான் எண்ணி இருக்க முடியும்! அத்தான்! தாங்கள் தொட்ட இவ்வுடல் வேறொருவனுக்கா சொந்தமாவது! முடியாது! நான் சம்மதிக்கவே மாட்டேன்!......ஆனால் தந்தையின் உயிர்?......" புயலில் சிக்கிய உலர்ந்த இலையைப்போல் ஒரு நிலை இல்லாது அவள் மனம் தத்தளித்தது. யோசித்தாள். நீண்டநேரம் யோசித்தாள்! தந்தையின் கையிலிருந்த விஷக் கிண்ணத்தைப் பார்க்கப் பார்க்க அவளுக்குப் பயம் அதிகமாயிற்று.

"தந்தையோ பிடிவாதக்காரர். தாம் சொன்னதை ஆத்திரத்தில் செய்தே காட்டி விடுவார்! இப்பொழுதோ மனம் குழம்பி கோபத்தோடு இருக்கிறார். கோபம் தணிந்ததும் எப்படியும் சரிசெய்துவிடலாம்" என்றெண்ணி, "அப்பா!" என்று கனிவோடு அழைத்தாள், கண்களைத் துடைத்துக்கொண்டு.


"பதிலென்ன குமுதம்! அது தான் எனக்கு வேண்டும்!"

"தங்களது விருப்பப்படி

"என் விருப்பப்படியே
மணந்துகொள்கிறாயா?"
ஆர்வத்தோடு, கேட்டார்.

"ஆம் அப்பா!" என்று
தும் குமுதத்தின் கண்களில்
பவும் நீர் கசியத் தொடங்கிய

(தொடரும்)




சென்னையில் பாரகான் & சரஸ்வதியிலும்
ஏனைய முக்கிய ஊர்களிலும் ஓடுகிறது